தேர்வு எண் | | | |

# தமிழகத் தமிழாசிரியர் கழகம்

தோற்றம் : 1941 பதிவு எண் : 49/57 அரசு ஏற்பு எண் : 459/88

## தமிழ்ப் பயிற்சித் தேர்வு - 2022-2023

நேரம் : 3-00 மணி **பத்தாம் வகுப்பு** மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1. இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
2. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

---

**பகுதி – I (மதிப்பெண்கள் : 15)** 15 x 1 = 15

**குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. தமிழினத்தை ஒன்று படுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ................
(அ) திருக்குறள் (ஆ) புறநானூறு (இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்

2. ‘பெரிய மீசை’ சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
(அ) பண்புத்தொகை (ஆ) உவமைத்தொகை
(இ) அன்மொழித்தொகை (ஈ) உம்மைத்தொகை

3. “சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி” என்னும் அடியில் பாக்கம் என்பது .................
(அ) புத்தூர் (ஆ) மூதூர் (இ) பேரூர் (ஈ) சிற்றூர்

4. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .......................
(அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் (ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
(இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் (ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ..........., இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .............
(அ) அமைச்சர், மன்னன் (ஆ) அமைச்சர், இறைவன்
(இ) இறைவன், மன்னன் (ஈ) மன்னன், இறைவன்

6. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ..................
(அ) உவமை (ஆ) தற்குறிப்பேற்றம் (இ) உருவகம் (ஈ) தீவகம்

7. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
(அ) கூவிளம் தேமா மலர் (ஆ) கூவிளம் புளிமா நாள்
(இ) தேமா புளிமா காசு (ஈ) புளிமா தேமா பிறப்பு

8. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? Greentamil.in
(அ) துலா (ஆ) சீலா (இ) குலா (ஈ) இலா

9. ‘வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்’ - இவ்வடி குறிப்பிடுவது .........................
(அ) காலம் மாறுவதை (ஆ) வீட்டைத் துடைப்பதை
(இ) இடையறாது அறப்பணி செய்தலை (ஈ) வண்ணம் பூசுவதை

10. ‘நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்’
- என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
(அ) காடு (ஆ) விண்மீன் (இ) நறுமணம் (ஈ) காற்று

11. ‘வருந்தாமரை’ என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.
(அ) வரும் + தாமரை (ஆ) வரும் + தா+மரை (இ) வாரும் + தாமரை (ஈ) வருந்தா+மரை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

" முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு "

12. இப்பாடலின் ஆசிரியர் ...........
அ) தமிழழகனார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) நப்பூதனார் ஈ) பெருங்கௌசிகனார்

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ..........
அ) சிலப்பதிகாரம் ஆ) பரிபாடல் இ) காசிக்காண்டம் ஈ) தனிப்பாடல் திரட்டு

14. இப்பாடலில் இடம்பெறும் அடியெதுகைச் சொற்கள் ...............
அ) முத்தமிழ் - முச்சங்கம் ஆ) முத்தமிழ் - மெத்த
இ) மெத்த - மேவலால் ஈ) அணைகிடந்தே - ஆழிக்கு

15. ' துய்ப்பது ' - என்ற சொல் தரும் பொருள் ............
அ) பெறுவது ஆ) பொருந்துவது இ) கற்பது ஈ) காப்பது

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – I

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 4 x 2 = 8
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

17) வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

18) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

20) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
(அ) தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.
(ஆ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்

21) '**கண்** ' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

22) கலைச்சொற்கள் தருக. அ) Belief அ) Emblem

23) ' ஒலித்து ' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24) ' வேங்கை ' என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

25) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) வளி - வாளி ஆ) விதி - வீதி

26) கலவைச் சொற்றொடராக மாற்றுக.
அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.

27. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.
'வாழ்க்கையில் ............. மீண்டும் வெல்லும். இதைத் தத்துவமாய் ............. கூத்து சொல்லும்
(தோற்பாவை, தயங்கும், தோற்பவை, தங்கும்)

28. கீழ்க்காணும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.
அ) இல்லாமல் இருக்கிறது ஆ) வரப் போகிறேன்

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – I

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

29) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதோர் ஆகியோர்க்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது?
ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?
இ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?

30. “ தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் ” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

பிரிவு – II

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6
**வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

33) “கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் ” கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34) அடிபிறழாமல் எழுதுக.
அ) “ வாளால் அறுத்துச் ” - எனத்தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல். (அல்லது)
ஆ) “ மாற்றம் எனது ” - எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்

பிரிவு – III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

35) ‘ கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு ! ’ - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எடுத்தெழுதுக.

36) தற்குறிப்பேற்றணியைச் சான்றுடன் விளக்குக.

37) “ அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்” - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV
(மதிப்பெண்கள் : 25)

5 x 5 = 25


**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

38) அ. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)
ஆ. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39) அ. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)
ஆ. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

Greentamil.in



41) கதவு எண் 66, திருவள்ளுவர் தெரு, திருச்சி என்ற முகவரியில் வசிக்கும் மாணிக்கம் என்பவரின் மகன் அறிவழகன் என்பவர் ஸ்ரீரங்கம் கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை அறிவழகனாகப் பாவித்து கொடுப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) அ) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன் பயில்பவருடனோ, உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்த சமயத்தில் சினம் கொள்ளத்தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா (மாணவநிலையில் நீவீர் பின்பற்ற வேண்டிய அறங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.)

(அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was fit for cultivation, as it had the most fertile lands. The properity of farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered IndispensIble by the ancient Tamils

## பகுதி - V
## (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3 x 8 = 24

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைத் கவர்ந்த நான்கு அறங்களைக் குறிப்பிட்டு அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

44) அ) " கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே " என்கிறது வெற்றி வேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் ' ஒருவன் இருக்கிறான் ' சிறுகதையில் மனிதத்தை வெளிபடுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) ' சான்றோர் வளர்த்த தமிழ் ' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

Greentamil.in - 97861 4141(

## நூலக உறுப்பினர் படிவம்

_______________________________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை /ஊர்ப்புற நூலகம் _____________________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண்:

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

Greentamil.in

நான் ______________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. _____ சந்தா தொகை ரூ. _____ ஆக மொத்தம் ரூ. _____ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: தங்கள் உண்மையுள்ள,

நாள்:

திரு / திருமதி / செல்வி/ செல்வன் ______________________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)


நூலக உறுப்பினர் படிவம்

_______________________________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை /ஊர்ப்புற நூலகம் _____________________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண்:

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ______________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. _____ சந்தா தொகை ரூ. _____ ஆக மொத்தம் ரூ. _____ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: தங்கள் உண்மையுள்ள,

நாள்:

திரு / திருமதி / செல்வி/ செல்வன் ______________________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)